விலை 0—1—0 "NAMNADU" Weekly. REGD. No. M. 4802

# நம்நாடு

நம் நாடு செழிக்க வேண்டும்.

நாமெலாம் களிக்க வேண்டும்.

"நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்—இது நமக்கேயுரிமையாம் என்பதுணர்ந்தோம்"

நிர்வாக ஆசிரியர்: K. பழனிவேலு. உதவி ஆசிரியர்: D. R. தாஸ்.

மலர் 1 } திருச்சி, 23—3—47 விய ஆண்டு பங்குனி 10 ஞாயிறு { இதழ் 13

# ஜன நாயகமா? பண நாயகமா?

## "அவன் கிடக்கிறான் குடிகாரன், போடு இங்கே--!"

[நவஜவான்]

ஆம்! இன்று ஜனநாயக சர்க்கார்தான் இந்தியாவை ஆட்சி புரிகின்றது. சர்க்கார் தாசர்களும், பிணாமிகளும், பட்டதாரிகளும், பதவி வேட்டைக்காரர்களும் பல்லாண்டு, பல்லாண்டாக இந்திய சர்க்காரை செம்மையுடன் நடத்துவதற்கென்று உத்தியோகங்களில் அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருந்த அந்தக் காலம் மலையேறி வெகு காலமாகிவிட்டது!

* *

இந்தியா பரமதரித்திரம் கொண்ட நாடு; இந்நாட்டில் ஒருவேளை கஞ்சிக்கும் வகையற்ற கோடிக்கணக்கான மக்கள் தரித்திர நாராயணர்களாக வாழ்கின்றார்கள்; இந்தியர்களின் சராசரி வருமானம் நாள் ஒன்றுக்கு 0—1—3 அணா. இப்படியிருக்க இந்நாட்டிலுள்ள அதிகாரிகளுக்கு மாதமொன்றுக்கு 1000, 2000, 3000, 4000, 5000, 10,000—ம் என்பதாக இவ்வளவு அதிக சம்பளம் என், கொடுக்கவேண்டுமென்று, இன்று ஜனநாயக வாதிகளாக விளங்குகின்றவர்களாலேயே, அன்று கேட்கப்பட்டது!

* *

ஆனால், ஜனங்களிடம் உணர்ச்சியூட்டி ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டு, ஜனங்களின் ஆதரவோடு ஜனநாயகத்தை ஸ்தாபிக்கப் புறப்பட்டவர்களிடம் இன்று என்ன மாறுதல் கண்டோம்? அப்படிப் பிரமாதமாக எதுவும் சொல்வதற்கில்லை! ஏதோ சில நிர்மாணத் திட்ட வேலைகளைத் தவிர, நபர்களைப் (அதிகாரிகள்) பற்றியவரையில் பழைய கருப்பனே, கருப்பன்தான்! நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் நீலிக்கண்ணீர் வடித்த—வடிக்கின்ற ஜனநாயகவாதிகளில் யாராவது தங்களுக்கு சம்பளமில்லாமல்—அல்லது குறைந்த சம்பளத்தில் மக்களுக்கு சேவை செய்ய முடியும்' என்று சொல்ல முன் வந்தார்களா? அவைதான் இல்லை! "அதுக்கு இது நீளம், புளிப்புக்கு அப்பன்" என்ற மாதிரியில்தான் இருக்கின்றது!

* *

பட்டவேட்டைக்காரனும், பதவி வேட்டைக்காரனும், பணக்காரனும், படித்தவனும் பாமரமக்களுக்குப், பரமவிரோதிகள் என்று பலப்பல ஜனநாயக வாதிகள் கூறிவந்தவை நமது செவிகளில் விழுந்தன. ஆம்! அவர்கள் கூறியவை உண்மைதான். சுதந்தரம், சுயராஜ்யம் என்ற கூச்சல் எவருக்காகப் போடப்பட்டு வந்தன—வருகின்றன? பாமர மக்களுக்குத்தான் சுயராஜ்யம் வேண்டும். அவர்களது நல்வாழ்விற்குத்தான் சுயராஜ்யம் வேண்டும். காடு களைந்து, கழனி திருத்தி காலமெல்லாம் கஷ்டஜீவனம் செய்யும் பாட்டாளி மக்களுக்கே சுயராஜ்யம் வேண்டும். உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்கஇடமின்றி, படுக்க பாயின்றி பரதவிக்கும் பலகோடி மக்களுக்குத்தான் சுயராஜ்யம் வேண்டும். நோயுள்ளவனுக்கு மருந்து தேவை போன்று, வாழ்க்கையில் சிரமப்படுவோனுக்கே சுயராஜ்யம் வேண்டும்!

* *

இதல்லாமல், நமது ஜனநாயகவாதிகள் விரும்பிய சுயராஜ்யம் பணக்காரர்களுக்கல்ல; பட்டதாரிகளுக்கல்ல; பதவியாளர்களுக்கல்ல. பாடுபடாமல் சோம்பேறியாக மக்களின் இரத்தத்தை உறிஞ்சி வாழ்க்கை நடத்தும் கோடீஸ்வரர்களுக்கல்ல இத்தகைய சுதந்திர இன்பத்தை ஸ்தாபிக்கவந்த மகானுபாவர்களே தங்கள் சொல்லுக்கும், கொள்கைக்கும் விரோதமான செயல்களைச் செய்ய முன் வருவார்களேயானால் நாம் இத்துன்பத்தை யாரிடம் சொல்லி முறையிடுவது? "வேலியே பயிரை மேய்ந்தால் வேறென்ன வேண்டும்"? "பணம் என்றால் பிணமும் வாய் திறக்கு" மென்பார்களே அப்படித்தான் இருக்கிறது இன்று நம் நாட்டின் ஜனநாயக அரசியலை நடத்துவோரின் பெரும் போக்கு! "சொல்லுதல் யார்க்கும் எளிதாம் சொல்லியவண்ணம் செயல்" என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கை மெய்ப்பிக்கின்றார்கள் இப்புண்ணியவான்கள் என்பதை எண்ணும்பொழுதுதான் நமக்கு நகைப்புண்டாகின்றது!

* *

"சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி" என்றபடி சர்க்கார் தாசர்களும், பிணாமிகளும், பதவி வேட்டைக்காரர்களும் இந்நாட்டின் அரசியலை நடத்திய காலத்தில் ஏற்படாத கஷ்ட, நஷ்டங்களும், கொடுந்துன்பங்களும், பயங்கர சம்பவங்களும் ஜன நாயக ஆட்சியில் ஏற்பட்டுள்ளதை எண்ணும்பொழுது பொதுமக்களின் மனது புண்படுகின்றதென்பதை நாம் சொல்லவும் வேண்டுமா? "ஐயோ, இவைதானா சுயராஜ்யம்? இதற்குத்தானா இத்தனை ஆர்ப்பாட்டம்? இதற்காகவா சிறைவாசம் சென்றது?" என்று மக்கள் கேட்பது இயற்கைதானே?

* *

ஜனநாயக வாதிகளாகிய காங்கிரஸ் மந்திரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு சம்பளம் ரூ 1500—0—0; ஆனால், அதே ஜனநாயக வாதியாகிய ஒரு சாதாரண ஊழியருக்கு சம்பளம் ரூ 15—0—0. வசதியும், செல்வாக்கும் உள்ளவர்களாகிய அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்களுக்கு நாள் ஒன்றுக்கு அலவன்ஸ் ரூ 45—0—0. ஆனால், அதே இடத்தில் வேலைபார்க்கும் ஒரு சாதாரண பியூனுக்கு மாதமொன்றுக்கு சம்பளம் ரூ 25—0—0. இவைதான் இன்றுள்ள ஜனநாயக வாதிகளின் தேசிய பொருளாதார சீரமைப்புத் திட்டம்! எப்படியிருக்கின்றது வேடிக்கை?

* *

பணநாயகத்தை ஒழிக்கத் தோன்றிய ஜனநாயகம் அதே, பணநாயகத்தைப் பின்பற்றுமானால், ஜனநாயகமென்ற பெயரில் மக்களை ஏமாற்றுவதைத் தவிர, வேறு என்ன இருக்க முடியும்? ஒருவேளை கஞ்சிக்கும் வகையற்ற கோடிக்கணக்கான மக்கள் இந்நாட்டில் பஞ்சைப் பனாதிகளாகத் திரியும்போது, ஜனநாயகத்தின் பெயரில் ஆயிரக்கணக்கான சம்பளம் பெற்று சுகபோகம் அனுபவிப்பது எந்த நீதிக்குப் பொருந்தும்? "அவன் கிடக்கிறான் குடிகாரன் எனக்குப் போடு இரண்டு — —" என்பது போலத்தான் இருக்கின்றது! ஆகவே, இது என்ன, ஜனநாயகமா? பண நாயகமா? ——

"நம்நாடு" சந்தா விபரம்

1 வருடம் ரூ. 3—8—0

ஆறு மாதம் ரூ. 2—0—0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

மானேஜர்: "நம் நாடு" திருச்சி.

# "நம் நாடு"

திருச்சி, 23—3—47 ஞாயிறு

## தேவர் பார்க் எங்கே?

திருச்சி நகர சபை நிர்வாகத்தை ஓர் அளவிற்கு உன்னத நிலைக்குக் கொண்டுவந்த பெருமை திரு. பி. ஆர். தேவர் அவர்களைச் சார்ந்தது என்றால் மிகையாகாது.

திரு. தேவர் அவர்கள் ஓர் உண்மை வீரர்; சிறந்த தேச பக்தர்; இதுவரை அவர் திருச்சி நகர மக்களுக்குச் செய்த சேவை பலப்பலவாகும். எடுத்த காரியத்தை எவ்விதமேனும் முடித்துவிடுவதே அவருடைய சிறந்த சுபாவம். திருச்சியில் நடைபெறும் எந்தத்தேர்தல்களிலும் தேவருக்கு விரோதமாக யார் போட்டியிட்டாலும் அவர்கள் படுதோல்வி யடைவார்களென்பது நாடறிந்த உண்மையாகும்.

தேர்தல் காலங்களிலே தேவர் பெட்டியில் பெருவாரியான ஓட்டுகள்விழுந்துநிறப்பப்பட்டுதொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் இவரே நகர சபைத்தலைவராக வீற்றிருந்தாரென்றால்; இவருக்கும் திருச்சி நகரப்பொது மக்களுக்கும் எவ்வளவு தொடர்பு இருந்திருக்கின்றதென்பதை நாம் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம், திரு.தேவர் அவர்களால் நகர மக்களுக்குப்பல நன்மைகள் செய்யப்பட்டுள்ளன. விளக்கு வசதி, ரோடு வசதி, வாசகசாலை, நாடகசாலை, துர்நாற்றம் வீசியகுளங்களை மூடி, அவற்றில் பார்க்குகள் உண்டாக்கியது ஆகிய இவைகள் பிரதானமாகும்.

இத்தகைய சிறந்த நகரத் தந்தையாகிய திரு தேவர் அவர்கள் சின்னாட்களுக்கு முன்னர் தமது தலைமைப்பதவியினின்று விலகிவிட்டதானது திருச்சி நகர மக்களின் துரதிர்ஷ்டமென்றே கூறவேண்டும், நீண்டகாலம்நகரபரிபாலனசேவையில் ஈடுபட்டு உழைத்த இப்பெரியாரின் ஞாபகார்த்தமாக இவரது சிலையொன்றை நகர பரிபாலன சபையின் முன்பு அமைக்க நகர சபை அங்கத்தினர்கள் செய்த முயற்சியை நாம் பாராட்டுகிறோம். இம்முயற்சிவிரைவில்வெற்றிபெறுமாக.

இத்தகைய உண்மை வீரரின் பெயரால் "தேவர் பார்க்" என ஒன்று இருக்கவேண்டியது நமது விருப்பமாகும். ஏன் நகர மக்களின் விருப்பமாகும்-ஆகவே தக்க இடத்தில் "தேவர் பார்க்" என்ற ஒன்று திருச்சியிலே திறக்கப்படவேண்டும். இதற்கு நகர சபையார் எங்கே இடம் பார்க்கின்றனர்? என்பதே நமது விருப்பம்

---

## சென்னை காங்கிரஸ் வேடிக்கை!

"காங்கிரஸ்காரர்கள் கட்டுப்பாடுடையவர்கள்" என்ற அபிப்பிராயத்திற்கு விரோதமான செயல்களைக் கையாளுகின்றார்கள் நமது மாகாண காங்கிரஸ் வாதிகள். தேசிய நோக்கமற்ற ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபையாருக்கு இருந்துவந்த கட்டுப்பாடும், ஒற்றுமை நோக்கமும் ஜனநாயக வாதிகளாகிய காங்கிரஸ்காரர்களிடம் இல்லாமற்போய் விட்டதென்றால் இவற்றை யாரிடம் சொல்லி முறையிடுவதென்றே தெரியவில்லை. தேசத்தின் பெயராலும், தேசபக்தியின் பெயராலும் மக்களிடம் ஓட்டு பெற்று சட்ட சபைக்குச் சென்றுள்ள சில சுயநல வாதிகளின் சூழ்ச்சி காரணமாகவே இன்று மந்திரி சபைக் குழப்பமும், மற்ற தொல்லைகளும் ஏற்பட்டுள்ளதென மக்கள் கருதுகின்றனர். சென்னை காங்கிரஸ்காரர்களின் செய்கையானது பிற்போக்காளர்களுக்கும், தேசிய விரோதிகளுக்கும் ஒரு வேடிக்கையாகவே தோன்றுகிறது. இது பற்றி அடுத்த இதழில் விரிவாக எழுதுகிறோம்.

---

## 'பாகவதர்—கிருஷ்ணன் விடுதலை வேண்டும்'

தமிழ் சினிமா, நாடகக்கலையின் பிரதிபிம்பங்களாகிய இரு ஜீவன்கள் இன்று சிறையில் கிடந்து வாடுகின்றது. இதனால் தமிழகத்தின் ஒப்பற்ற கலைகளாகிய தமிழ் நாடக, சினிமா கலையானது சந்திரனில்லாத வானம் போன்று ஒளிமங்கிக் கிடக்கின்றது.

அந்தோ! இப்படியும் ஒரு உலகமா? இப்படியும் ஒரு தண்டனையா? இப்படியும் ஒரு நீதியா? இவற்றை நம்மால் சகிக்க முடியவில்லையே! பஞ்சமாபாதகர்களையும், அறிவிலிகளையும், அயோக்கியர்களையும் ஏற்றுக்கொள்ளும் இவ்வுலகம் கலையின் இருப்பிடமாகிய இருகலைஞர்களுக்கு ஜன்ம தண்டனையாம்! அம்மம்ம! கொடுமை! கொடுமை!

நமது செந்தமிழ் நாட்டின் சீரிய கலைக்கு புத்துயிரும், புதிய சக்தியும், அளித்து வந்தவர்களில் நமது பாகவதரும்—கிருஷ்ணனும் பிரதான புருஷர்களல்லவா? இவற்றை யார் இல்லையென்று மறுக்க முடியும்? தமிழ் நாட்டின் மகோன்னத கலைக்கு பாகவதரும்—கிருஷ்ணனும் இருகண் போன்றவர்களல்லவா! கண் இழந்த கபோதிக்கு உலகக் காட்சிகள் தோன்றாததுபோல், இவ்விரு கண்மணிகளில்லாத கலை உலகம் எவ்விதம் பிரகாசிக்கும்?

தமிழ் நாட்டில் தமிழ் சினிமாகலைக்கு ஒரு பெருமையும், புகழும், செல்வாக்கும் தோன்றி வந்ததென்றால், அவை நமது பாகவதர்—கிருஷ்ணன் ஆகியவர்களின் சீரிய நடிப்பினால்தான் என்பது நாடறிந்த உண்மையாகும். இக்கலாமணிகளுக்கு இன்று ஏற்பட்டுள்ள கடுமையான நிலைகண்டு நாடு வருந்துகிறது! இவர்கள் பிரிவி கவுன்சில் அப்பீல் வழக்கில் வெற்றி பெற்று விரைவில் வந்து மீண்டும், தமிழ் நாடக, சினிமா கலைக்குத் தொண்டாற்ற வேண்டுமென தமிழ் மக்கள் மனப்பூர்வமாகவிரும்புகின்றனர். பாகவதர்—கிருஷ்ணன் விடுதலை வேண்டுமென்பதே இன்றைய தமிழகத்தின் ஆவல்!

---

## அறிஞர் விருந்து.

(தி ரா. த.)

**துறவு:** இந்த உலகில் மூன்று விதத் துறவுகள். அவை அறிவையும், இன்பத்தையும் சமயத்துக்காக வெறுத்தல் சமயத்துறவு; அதிகாரத்துக்காக வெறுத்தல் போர்த் துறவு; பணத்துக்காக வெறுத்தல் பணத்துறவு; இக்காலத்தில் காணப்படும் துறவு மூன்றுவதே. — ரஸ்கின்.

**தனிமை:** தனிமை உலகத்தில் வெகு சிலரே தனியாக வாழத் தகுதியுடையவர். அவர்களுக்கு உலகத்தின் மாயையை அறியப் போதுமான லௌகிக ஞானமும், சகல மாயையையும் வெறுத்(து) தள்ளப் போதுமான அறவொழுக்கம் இருக்கவேண்டும். —கௌவி.

**கடமை:** நல்லவனும், ஞானியும், சில சமயங்களில் உலகத்தைக் கோபிக்கலாம், சில சமயங்களில் அதற்காக வருந்தலாம். ஆனால் உலகில் தன் கடமையைச் செய்பவன் எவனும் அதனிடம் ஒரு பொழுதும் அதிருப்தி கொள்வதில்லை என்பது மட்டும் நிச்சயம். —ஸதே.

**மூடநம்பிக்கை:** மூடநம்பிக்கை மனித அமைப்பிலேயே ஓர் அம்சம்; அதை ஓட்டிவிட்டோம் என்று மனோராஜ்(ஜி)யம் செய்யும் பொழுது, அது நம் மனத்தில் ஒரு மூலையில் பதுங்கி இருக்கும். தனக்கு அபாயம் வராது என்ற நிலைமையில் திடீரென்று வெளியேறும்.—கதே.

**அறிவீனம்:** மூடன் பிறரை குறை கூறுவன் (கூறுவான்) அரை குறை அறிவாளி தன்னைக் குறை கூறிக்கொள்வான். அறிவு முற்றியவன் தன்னையும் குறை கூறான். பிறரையும் குறை கூறான். —ஹெர்டர்.

**அறிவு:** நாம் அறிவதின் அளவு சுருங்குவதே, நாம் அறிவில் முன்னேற்றம் அடைவதைக் காட்டும்—இப்படிக் கூறுவது முரணாகத் தோன்றலாம், ஆனால் உண்மையே ஆகும். —ஹாமில்டன்.

# "பழிக்குப்பழி"

[ D. R. தாஸ் ]

(உரிமையுடையது)

## அத்தியாயம் 7

இடம்.- சித்தூர், சித்ரசேனையின் அந்தரங்க அறை

பாத்திரங்கள்:- சித்ரசேனை, சேனாதிபதி தூமகேது.

[நடுநிசி, சித்ரசேனை அயர்ந்து நித்திரை செய்கிறாள் முகமூடியுடன் சேனாதிபதி தூமகேது உள்ளே வந்து அவளை எழுப்புகிறான் ]

சித்திரசேனை:— [தூமகேதுவைக் கண்டவுடன்] வாருங்கள்! வாருங்கள்!! தங்கள் வருகையைத்தான் எதிர்நோக்கி இருந்தேன்!

தூமகேது:- [ஏளனசுரத்தில்] சித்திரசேனா! நான் இங்கு வந்தது யாருக்கும் தெரியக்கூடாது. மெதுவாக பேசவும், ... அது இருக்கட்டும் சித்திரசேனா! அந்த மதிவதனர் நேற்று இங்கு மகாராணியை நாடிவந்தது உண்மைதானா?

சித்திரசேனை:- ஆம்! ...... ராஜ்ய விஷயமாக ஏதோ பேசிவிட்டு உடன் சென்றுவிட்டதாகக் கேள்வி!

தூமகேது:- அவர்கள் பேசிய விபரம் உனக்கொன்றும் தெரியாதா?

சித்திரசேனை:- மகாராணியும், மதிவதனரும் அந்தரங்கமாகப் பேசிய விபரத்தை யான் எவ்வாறறிவேன்?

தூமகேது:- சரி, அவை போகட்டும் கண்ணே, சித்திரசேனா! உனது சந்திரகாந்த வதனத்தில் ஏதோ, கலக்கம் தோன்றுகிறதே, ஏன்? ......

சித்திரசேனை:- [வினயமாக] உம்!.... என் கஷ்டம் உங்களுக்கு என்ன தெரியும்?

தூமகேது:- [கெஞ்சுதலுடன்] அஞ்சுகமே! என் ஆசைக்கிளியாகிய உனக்கு அவ்விதம் என்ன கஷ்டம் ஏற்பட்டது? .. ... ... உனது மகிழ்ச்சி எனது பேரின்பவாழ்வாயிற்றே!

சித்ரசேனை:- [சினமாக] சரி, சரி, உங்கள் அந்தரங்கத்தை நான் நன்றாக அறிவேன்! உங்களைச் சொல்லுவதில் யாது பயன்? எல்லாம் என் தலைவிதி ..

தூமகேது:- ஆரணங்கே! விதி, விதி, என்கிறாயே! உன் விதிக்கு மதியே கிடையாதா என்ன? ... ... ...

சித்ரசேனை:- ஆம், ஆம், நீங்கள் எது சொல்லினும் சரி! உங்கள் மாயச்சொற்களைக்கேட்டு இனி நான் மயங்கப்போவதில்லை! அந்த மதிவதனரின் மனைவி காந்தாவின் மீது உங்களுக்கு அன்பு! காந்தாவுக்கோ உங்கள் மீது ப்ரீதி! ஆனால்? ... ... ...

தூமகேது:— [துடிப்புடன்] சித்ரசேனா! எனது பிரேம பத்தினியாகிய நீ என் மனமறியாது பேசுவது தர்மமாகுமா என் அருமருந்தென்ன காதலியாகிய உன்னையல்லவோ, யான் உண்மையோடு நேசிக்கிறேன்! ... ...

சித்ரசேனை:- [சினமாக] என்ன! என்னை உண்மையாக நேசிக்கின்றீரா? ... ... அப்படியானால் நீர் செய்த உறுதியை மறப்பீரா?

தூமகேது:- [வீரமாக] இல்லை! ... இல்லை! நான் உன்னிடம் செய்த உறுதியை மறக்கவில்லை! என்றைக்கிருந்தாலும், நீலக்கொட்டையைக்கைப்பற்றி, உன்னை மணந்து, எனது நாடாளும் நாயகியாக்கியே தீருவேன்! இது சத்தியம்! சத்தியம்!

சித்ரசேனை:- [புன்னகையோடு] காதலரே! மகா ராணியின் உற்ற தோழியாகிய என்னை இழிவாக மதித்து. நமது எண்ணங்களை சீர்குலைக்கும் நோக்கத்துடன் ராணியின் அன்புக்குப்பாத்திரமாக இருந்து வரும் அந்த மதிவதனரை மடக்கும் வரையில் நமது நோக்கம் நிறைவேறுவது துர்லபமாகுமென்பது உங்களுக்குத் தெரியாதா, என்ன? ...

தூமகேது:- கண்ணே! கவலைவேண்டாம், ரீஜண்ட் காமசேகரர் என் சொல்படி ஆடும்பொழுது இவையெல்லாம் முடியாத காரியமா, என்ன? உன் எண்ணத்தை அதி சீக்கிரம் நிறைவேற்றுகிறேன், கவலையைவிடு!

சித்ரசேனை:- [மகிழ்வோடு] நாதா! நான் தங்கள் மீது வைத்த காதலால் நாளுக்கு நாள் என் உடல் துரும்பாகி வருவதை நீர் அறியவில்லையா?

தூமகேது:- [இரக்கமாக] சித்ரசேனா! உன் சுகமும். உன் மகிழ்வுமே என் ஜீவனும், என் வாழ்வும்! ... ... அவ்வாறிருக்க நீயேன் கலங்கவேண்டும்? ... நமது மனோவிரதம் முடிந்ததும், நாம் இருவரும் உயிரும் உடலுமாக இன்ப வாழ்வு வாழ்வோமென்பதில் யாது சந்தேகம்?

சித்ரசேனை:- [புன்னகையோடு] ஆருயிர்க்காதலரே! அப்படியாயின் இதோ, என்னைக்கட்டித் தழுவி ஒரு முத்தம் கொடுங்கள்!

தூமகேது:- ஆசை மயிலே! இதோ, ... ... பெற்றுக்கொள்!

[சேனாதிபதி தூமகேது. சித்ரசேனையைக்கட்டித் தழுவி முத்தமிடுகிறான் ]

தூமகேது:- கண்மணி! நான் இங்கு வந்திருப்பதை யாரும் கவனித்துவிடுவார்கள். நான் சென்று சீக்கிரம் வருகிறேன், எனக்கு விடைகொடு!

சித்ரசேனை:— அன்பரே! வெற்றியுடன் விரைவில் வரும் நாளை எதிர்பார்க்கிறேன்! [இருவரும் பிரிகின்றனர்]

(தொடரும்)

## இந்திய இளைஞர்கள் ராணுவத்தில் சேரவேண்டும்

'இந்தியாவின் இளைஞர்கள் அனைவரும இந்திய ராணுவத்தில் சேர வேண்டும். இந்தியாவின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு இது வழி. இதனால் தேசத்தின் பாதுகாப்புப் படைகள் அபிவிருத்தியடைவதுடன், நாட்டின் இளைஞர்களும் அபிவிருத்தியடைய முடியும்' என்று ராணுவத்தினர் நியமன போர்டு டைரக்டரான பிரிகாடியர் நாதுசிங் இன்று பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

பிரிகாடியர் நாதுசிங் மேலும் கூறினார்:- தேசத்தில் கல்வி கற்ற இளைஞர்களனைவரையும் சட்டாய ராணுவ சேவைக்கு இரண்டு வருஷங்களுக்குத் திட்டம் சாத்தியப்படாவிட்டால் எல்லா பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் கட்டாய ராணுவப் பயிற்சி இருக்கவேண்டும். தேசப் பாதுகாப்பு சம்பந்தமான அடிப்படை போதனை அங்கு நடைபெறவேண்டும்.


## அதிக சீக்கிரத்தில் குறைந்த செலவில் சௌக்கியம் அடையலாம்.

வீர்யம், ஜீவ சக்தியின்மை, நரம்புத் தளர்ச்சி, வெள்ளை, வெட்டை, மாதவிடாய்க் கோளாறுகள், வெட்டைச்சூடு, ஸ்வர்ப்பன ஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு நேரில் வரமுடியாத வியாதியஸ்தர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு கடித மூலியமாய் வியாதி, சகல விபரங்களையும் எழுதி பதிலுக்கு 4 அணா தபால் ஸ்டாம்பு வைத்து அனுப்பினால் மறு தபாலில் மருந்து சாப்பிடவேண்டிய காலம், கிரயம் முதலியவைகளை தெரிவிப்போம்.

**கே. என். சுகானந்த மருந்துசாலை,**
பாரி கம்பெனி ரோடு,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.



### சுகானந்த லேகியம்.

இதை உபயோகித்துப் பார்த்ததில் எல்லா வியாதிகளுக்கும் கை கண்ட மருந்து எனத் தெரிகிறது. இதை அனைவரும் ஒருமுறை பரீட்சிக்க விரும்புகிறோம். குறைந்த விலையில் கொடுக்கப் படுகிறது

ஆசிரியர்.



எதிர்பாருங்கள்!

**திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில்**

சக்தி நாடக சபையார்

நடத்தும் நாடகங்களை!

# தமிழர் கழகக் கொள்கைகள்.

தமிழர் கழகத்தின் கொள்கை அடியிற்கண்டவாறு இருக்கவேண்டுமெனக் கழக இடைக்கால நிர்வாக குழுவினர்களின் 27—1—47 திருச்சி கூட்டத்திலும் 9—2—47 சென்னைக் கூட்டத்திலும் ஒரு மனதாக ஒப்புக்கொள்ளப் பெற்றிருக்கிறது. இதை தமிழ்ப் பெரு மக்களின் பொது எண்ணத்தை யறிய இப்போது வெளியிடப்படுகிறது.

1. தமிழையே தாய் மொழியாகக் கொண்டவர்களும், தமிழ் மொழியே எம்மொழியினும் சிறந்த மொழி எனும் உண்மையை ஒப்புக்கொள்ளுகிறவர்களும், தமிழ் நாட்டையே தங்கள் தாய் நாடாகக் கொண்டு. தங்களைத் தமிழரெனக் கொண்டவர்களும், பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்பதை ஒப்புக் கொண்டு, தமிழர் யாவரும் ஒத்த உரிமையுடைய மக்கள் என்பதற்கு உடன்படுபவர்களும் இக்கழகத்தில் உறுப்பினர்களாகலாம்.

2. மிகப் பழங் காலந் தொட்டே தமிழ் நூல்களிலும், வழக்காற்றிலும் தமிழ் நாட்டு எல்லையாக உள்ள வடவேங்கடந் தென் குமரிக் குட்பட்ட நிலப்பரப்பு முழுவதும் தனி நாடாகி, தமிழ் மக்களின் தனி அரசாக நடைபெற வேண்டும்.

3. அனைத் திந்தியப் பொது அரசுக்கு, மாகாணங்கள் பொதுவில் விட்டுக்கொடுக்கும் ஆட்சி உரிமைகள் தவிர, மற்ற எல்லா அரசியல் உரிமைகளுந் தமிழ் நாட்டிற்கே இருத்தல் வேண்டும்.

4. தமிழ் நாட்டின் அரசியல் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.

5. தமிழ் நாட்டில் தமிழைத் தவிர வேறு எந்த மொழியும் கட்டாயப் பாடமாக இருத்தலாகாது.

6. தமிழர் கழகம் சமயச்சார்புகளில் தலையிடாது. என்றாலும் நாட்டு நலனுக்கேற்ற சீர்திருத்தங்களைச் செய்யப் பின் வாங்காது.

7. தமிழ் மக்களின் வாழ்வு, தாழ்வு, வழிபாடு முறைகளைத் தமிழ் மொழியில், தமிழர்களைக்கொண்டே நடத்தவேண்டும் என்பதை கழகம் வற்புறுத்தும்.

8. தமிழ் மக்களில் 100-க்கு 75-பேர் உடன்பட்டாலொழிய், அரசியல் முறையில் வேறுபாடுகள் செய்ய இயலாது.

9. பதினெட்டு வயது நிரம்பிய ஆண், பெண் அனைவருக்கும் ஓட்டுரிமை இருத்தல் வேண்டும்.

10. தமிழ் நாட்டு உழவு, வணிகம், கைத்தொழில், மருத்துவம், கல்வி, அறிவு, ஆராய்ச்சி, பொருளாதாரம் ஆகியவைகளின் வளர்ச்சிக்குக் கழகம் ஆக்கம் அளிக்கும்.

இதைக் கண்ணுறும் அறிஞர்கள் தங்களின் திருத்தத்தையோ அல்லது கருத்தையோ உடனே அறிவிக்க வேண்டுகிறோம்.

தங்களன்பிற்குரிய,

திருச்சி,
20—3—47.

கி. ஆ. பெ. விசுவநாதம்,
அமைச்சர், தமிழர் கழகம், திருச்சி.

# உருப்படப்போவதில்லை!

ஆலயங்களெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடப்படுகின்றன. ஹோட்டல்களிலெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்ல உரிமை கோரப்படுகின்றது. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்கு தடைசெய்பவர்கள் தண்டனைக்குள்ளாகவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. காரணமென்ன? "ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்த கொடிய தீண்டாமை என்னும் அரக்கனால்தான் மக்கள் சமத்துவமாக வாழ வழியில்லாது சேவலம் நாயினும் மோசமாக நடத்தப்படுகிறார்கள்; இந்தக்கொடிய தீண்டாமையைப்போக்கினால் தான் மக்கள் குதூகலமாக இருப்பார்கள். வருகிற சுதந்தரமும் வகையுடன் நிலைக்கும்" என்ற நல்லெண்ணத்துடனேயே காங்கிரஸ் தலைவர்கள் இப்பெரும் பணியில் ஈடுபட்டு, வெற்றிபெற்றார்கள். ஆனால், இதற்கு நேர்விரோதமாக "தீண்டாமை ஒழியக் கூடாது, இது நாட்டுக்கே பெரும் பாவம்" என்று சில பிரகஸ்பதிகள் அறிக்கைகள் விடுவதில் தவறுவதில்லை, இது போன்ற நிலையில்தான் கோயில் கிணறுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் எடுக்கக்கூடாதென்று 144 உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம் காஞ்சீபுரத்தில்! எப்படி இருக்கிறது நம் நாட்டின் தீண்டாமை ஒழிப்பு யோக்கியதை?

பூரண சுதந்திரம் கிட்டவழி பிறந்துகொண்டிருக்கையில்—வெள்ளையன் வெளியேற தருணம் பார்த்துக்கொண்டிருக்கையில் "பொதுக்கிணற்றில் ஒரு இனம்தான் தண்ணீர் எடுக்க உரிமை உண்டு. தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீரைத்தொட்டால் "தீட்டு ஏற்பட்டுவிடும் அதை பிறர் குடித்தால் பாவம் பீடிக்கப் பட்டுவிடும்" என்றபைத்தியக்காரபழைய பஞ்சாங்கத்தைப் புரட்டிக்கொண்டிருந்தால் நம்நாடு ஒருக்காலும் உருப்படப் போவதில்லை. நாமும் சுதந்திரம் என்னும் கூச்சல் — எழுத்து இவைகளைத் தான் காணமுடியுமே தவிற உண்மையான சுதந்திர நாட்டையடைந்து சுபிட்சமாக வாழ வழி கிடையாது. சமுதாயத்துறையிலே சீர்திருத்தம் விரும்பினால்தான் அரசியலிலே அது நிலைத்திருக்க வழி ஏற்படும். இதை முதலில் தமிழ் மக்கள் உணர்ந்து நடந்து கொள்ளுதல் நலம்.

—[()]—

# உணவு, ஜவுளி கட்டுப்பாட்டை நீக்குக.

## திருச்சி நகரசபை கோரிக்கை.

திருச்சி நகர சபை அவசரக்கூட்டம் ஒன்று சென்ற வாரம் தலைவர் திரு A. ராமசாமி தேவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நகர தண்ணீர் சப்ளை அபிவிருத்திக்கு ரூ. 65,000 அளிக்க சபை அங்கீகரித்தது. ஜவுளி, உணவுப் பொருள் ஆகியவைகளின் மீதுள்ள கட்டுப்பாட்டை நீக்கும்படி சர்க்காரிடம் கோரி ஓர் தீர்மானம் நிறைவேற்ற சபை சம்மதித்தது.




ஏஜண்டுகள் தேவை.

**Lilly Flower Engineering Works.**

**லில்லி பிளவர் இஞ்சினீயரிங் ஒர்க்ஸ்,**

பெரியகம்மாளத்தெரு, திருச்சி.

இரும்பு மிஷின் சம்பந்தமான கடசல் வேலைகளும், கட்டிடத்திற்கு வேண்டிய ஸ்பிரிங் கேட்டுகளும், இதர வேலைகளும் குறித்த காலத்தில் நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்.

புரோப்ரைட்டர் :— P. சுப்ரமண்ய ஆச்சாரி,
பெரியகம்மாளத்தெரு, திருச்சி.

Edited & Published by K. Palanivelu, & Printed at The Sri Ragupath Press, Trichinopoly.